மனித உரிமைகள் அடிப்படையிலான
சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய
சமூக ஊடகப் பயன்பாடு



COLOMBO | 2019 - 2024


# social media declaration

Version 2.0

#EngageSMinSL

சமூக பொறுப்புணர்வுடன் கூடிய சமூக ஊடகப்
பயன்பாட்டிற்கான ஒழுக்கநெறிக் கோவை

# "Digital Rights are Human Rights"




# பின்னணி

பல்வேறான இணைய அடிப்படையிலான செயலிகள் (Apps), வலைத்தளங்கள் மற்றும் இணையமேடைகள் என்பவையே சமூக ஊடகங்களாகும் என்பதுடன் இது பயனர்களுக்கு ஒருவரோடு ஒருவர் இடைத்தொடர்புகளை மேற்கொள்வதற்கு, உள்ளடக்கத் தயாரிப்புகளை மேற்கொள்வதற்கும், சமர்ப்பிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கிறது.

அத்துடன், ஏனைய விடயங்களுக்கிடையில் உள்ளூர், தேசிய, வலய மற்றும் பூகோள ரீதியாக ஆய்வாளர்களுடன் இணைத்தொடர்பை ஏற்படுத்துவதற்கும் இயலுமை கிடைக்கின்றது. சமூக ஊடகப் பயனாளர்கள் பூகோள எல்லைகளுக்கு வரையறுக்கப்படாமல், பெரும்பாலும் தமது நாடு, சமூகம் அல்லது சமூக – அரசியல் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டு "கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை" அனுபவிக்கின்றனர். இந்தக் கட்டுப்பாடற்ற தன்மை இயல்பாகவே நேர்மறை மற்றும் எதிர்மறை ஆகிய இரு வகையிலும் இடம்பெறுகிறது. ஒருசில பயனர்கள் நாகரீகமான, முற்போக்கான, கௌரவமான வகையில் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். வேறு சிலர் அவ்வாறில்லை. சிலர் சமூக இலக்குகளுக்காகவும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காகவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். இன்னும் சிலர் அதனை சமூக நல்லிணக்கத்தை வீழ்ச்சியுற வைப்பதற்காகவும் பிளவுகளை மென்மேலும் அதிகரிக்க வைப்பதற்காகவும் பயன்படுத்துகின்றனர். விரிவான ஒரு சூழலில் கலந்துரையாடல்களுக்கும் இடைத்தொடர்புகளுக்கும் முனைப்போடு பங்களிப்பதற்கு சமூக ஊடகங்கள் அதன் பயனர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. அறிவைப் பகிர்ந்து கொள்ளல், விமர்சன ரீதியான கலந்துரையாடல்களை உருவாக்குதல், அதிகார மனோபாவங்களை கேள்விக்குட்படுத்துதல் மற்றும் மாற்றுவழிக் கலந்துரையாடல்களை கட்டியெழுப்பும் பொருட்டு ஆவண மூலத்திலிருந்து கட்புலக்காட்சிகள் வரையான கருத்து வெளிப்பாட்டு வழிமுறைகளைப் பயன்படுத்த முடியும். கூட்டுச் செயற்பாடு, சாட்சிகளைக் கொண்டிருத்தல் மற்றும் ஏற்பாடு செய்தல் உட்பட தீர்மானமிக்க சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் சமூக ஊடகங்கள்

வாய்ப்பளிக்கின்றன. பல்வேறான பூகோள ரீதியான வலயங்கள், நேர வலயங்கள் மற்றும் நாடு முழுவதும் பரவியுள்ள மத்தியஸ்தர்கள் மற்றும் உருவாக்குநர்கள் பொதுவெளியில் கருத்துக்களை தொடர்ச்சியாக மதிப்பீடு மற்றும் விமர்சனம் செய்கின்ற காரணத்தினால் பெரும்பாலும் பூகோள, அரசியல் மற்றும் பௌதீக ரீதியான வரையறைகளில் எதுவிதமான தடைகளுமின்றி இடைத்தொடர்புகள் இடம்பெறுகின்றன.

அதேவேளை, நீண்டகால அடிப்படையில் மிகப் பின்னடைவான, அடக்குமுறைசார்ந்த மற்றும் குழப்பகரமான சமூகத்தினை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிடப்பட்ட அல்லது பகிரப்பட்ட உள்ளடக்கங்கள் பெரும்பாலும் பொதுமக்களது நலன்களில் பாதிப்பினைக்கொண்ட, சமூக–அரசியல் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகின்றது அல்லது அதிகரிக்கின்றது.

இலங்கையில் கூட பால்நிலை, தேசியம், மதம், சாதி அல்லது பாலியல் சார்புநிலைப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்ட வெறுப்பு மற்றும் வன்முறையைத் தூண்டும் உள்ளடக்கங்கள் ஊடாக இணையத்தில் இடம்பெறும் ஏற்படும் தீங்குகள் வேகமாக அதிகரித்து வருவதை நாம் கவலையுடன் தெரிவிக்க வேண்டியதாகவுள்ளது.

தங்கள் குறுகிய நோக்கங்களுக்காகவும் நன்மைகளுக்காகவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் அதிக அழுத்தம் செலுத்தக்கூடிய ஒரு சிலரும் தங்கள் தளங்களில் இருக்கும் எதிர்க் கருத்துக்களை புறக்கணிக்கின்ற அல்லது வன்முறைசார்ந்து நீக்கிவிடுகின்ற வகையில் செயற்பட்டு வருகின்றனர். சமூக ஊடகங்களில் தீங்கான அழுத்தங்கள் மற்றும் தவறான பயன்பாடுகள், நவீன அரசியல் அழுத்தப் பிரச்சாரங்கள், தவறான தகவல்களைப் போன்றே மிக மிக அதிகமாக உண்மைகளை மூடி மறைக்கவும் AI (செயற்கை நுண்ணறிவு) அடிப்படையிலான செயற்கை ஊடகங்களின் பயன்பாடு ஏதுவாக அமைகின்றதென்று உலகம் முழுவதிலும் இருந்து கிடைக்கின்ற அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, துருவப்படுத்தல் (ஆளமாகப் பிளவுபடுத்தல்) மற்றும் உண்மையை மூடி மறைப்பதற்காக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதனூடாக ஜனநாயகத்தின் அடித்தளம் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளது.


அரசாங்கமும் சமூக ஊடக நிறுவனங்களும் இவ்வாறு அதிகரித்து வருகின்ற சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு கடுமையான பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்கள் சமூக ஊடகத் தளங்களில் செய்வதாகக் கூறுகின்றவை பெரும்பாலும் உண்மையில் அவர்கள் செய்கின்ற விடயங்களுடன் வேறுபட்டதாகவே காணப்படுகின்றன. மறுபுறம் தான்தோன்றித்தனமான ஆட்சியாளர்கள் இணையதளத்தினூடாக பரப்புரையை விரிவாக்கும் அதேவேளை, மாற்றுக் கருத்துக்களை மௌனமாக்கும் குறிக்கோளுடன் சட்டங்களை இயற்றுவதற்கு, தவறான கருத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள், தவறான கையாளுகைகள் ஏதுவாகின்றன. பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் என்று கூறியபோதிலும் "கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்" முழுமையாக முடக்கப்படும் வகையில் சட்டங்களை இயற்றுதல் தொடர்பிலான மிகச் சிறந்த உதாரணமாக இலங்கையில் முன்னொருபோதும் காணப்படாத மற்றும் மிகப் பயங்கரமான "ஒன்லைன் பாதுகாப்புச் சட்டத்தை" (Online Safety Act No. 9 OF 2024 [OSA]) குறிப்பிட முடியும்.

இந்தப் பிரகடனம், சமூக ஊடகத்தினுள் அல்லது அதனூடாக கருத்து தெரிவிக்கும் உரிமையினை மீறப்பட முடியாத முக்கியத்துவத்தை அடையாளம் காண்பதற்கானதொரு முயற்சியாகும் என்பதுடன், ஒழுக்கநெறிமிக்க, முற்போக்கான, ஜனநாயக ரீதியான மற்றும் சமூக பொறுப்புடைய மற்றும் சிறந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட சமூக ஊடக பயன்பாட்டினை ஊக்குவிப்பதையும் வலுப்படுத்துவதையும் மேற்கொள்கிறது.



# குறிக்கோள்

சமூக ஊடகங்களை பொறுப்புடனும் ஒழுக்கநெறியுடனும் பயன்படுத்துவதனை ஊக்குவிக்கின்ற சமூகமொன்றினை போஷித்தல் மற்றும் அணுகலுக்கான உரிமை மற்றும் தகவல்களின் அடிப்படையிலமைந்த சமூகமொன்றினை உருவாக்கும் பொருட்டு டிஜிட்டல் மொழியறிவை வலுப்படுத்துதல். அத்துடன், சமூக ஊடகங்களை முறையற்ற விதத்தில் கையாள்வதற்குள்ள சாத்தியப்பாட்டினை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, இந்தப் பிரகடனத்தினூடாக டிஜிட்டல் உரிமைகளும் ‘மனித உரிமைகளே’ என்ற கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த சமூக நீதி, மானுட கௌரவம், அடிப்படை மனித மற்றும் சமூக இலட்சியங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டதொரு சமுதாயத்தினது பிரிக்க முடியாத ஒரு அங்கமாக அங்கீகரிக்கிறது.



# யார்?

இதில் கையொப்பமிட்ட தரப்பினர் பரஸ்பரம் இணங்கிக்கொண்ட இந்தப் பிரகடனத்தினை அனைத்து சமூக ஊடகத் தளங்கள் மற்றும் டிஜிட்டல் வெளிகளுக்கூடாகவும் அதேவேளை பாரம்பரிய ஊடக நீரோட்ட வெளிகளிலும் அவர்களால் இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஊக்குவிப்பார்கள்.

# ஏன்?

- இணையத்தினூடாக கருத்துக்களைத் தெரிவிக்கும் சுதந்திரம் உட்பட மனித உரிமைகளை வரையறுக்கும் குறிக்கோளினைக் கொண்ட சட்டரீதியான மற்றும் வேறு முயற்சிகளுக்கான ஒரு மாற்றுவழியாக,
- சமூக ஊடகங்கள் வாயிலாக வலுவான ஜனநாயக உரையாடல் இடைவெளியினை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் ஆர்வம் காட்டும் பங்காளர்களை ஊக்குவிக்கும் தளமாகவும், தமது கருத்தினை விட வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள் தொடர்பில் கௌரவமான நிலைமையினைப் பேணி, கருத்துக்கள் மீது கட்டியெழுப்பப்பட்ட வலுவான உரையாடலை ஊக்குவிக்கின்ற ஒரு மேடையாக,
- சமூக ஊடகங்களில் ஒழுக்கநெறிமிக்க, சமுதாய வழிகாட்டல் மற்றும் பொறுப்புடையதான பயன்பாடு பற்றிய விழிப்புணர்வூட்டலுக்கான கருவியாக மற்றும் வழிகாட்டியாக செயற்படுதல்.

COLOMBO | 2019 - 2024
social media declaration
Version 2.0
#EngageSMinSL

# ஒழுக்கநெறிக் கோவை

**அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் பயன்படுத்தும் அல்லது எம்மோடு தொடர்புடைய சகல சமூக ஊடகத் தளங்களிலும், ஒன்லைன் வெளிகளிலும் பின்வருவனவற்றை உருவாக்குதல் மற்றும் பரப்புரை செய்தலைக் குறைப்பதற்கு அல்லது அவற்றை முழுமையாக அடியோடு ஒழிப்பதற்கு உச்ச அளவில் நாம் செயற்படுவோம்.**

- இனம், மதம் அல்லது சாதி என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுதல்,
- பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள் (பால்நிலை வேறுபாடு, பாலியல் துன்புறுத்தல், பெண்ணியல் எதிர்ப்பு மற்றும் விருப்பத்தைப் பெற்றுக்கொள்ளாது கூறுணர்வுமிக்க படங்கள் (non-consensual intimate imagery - NCII), காணொளிகள் மற்றும் வேறு உள்ளடக்கங்களைப் பகிர்தல் உட்பட) மற்றும் பெண்களுக்கெதிராக ஏனைய வழிவிலான பாரபட்சம் காட்டுதல்,
- Generative AI ஊடாக தயாரிக்கப்பட்ட செயற்கை ஊடக உள்ளடக்கங்கள் உட்பட பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் NCII படங்கள் அல்லது சிறுவர் பாலியல் துஷ்பிரயோக உள்ளடக்கங்களைப் (child sexual abuse material - CSAM) பகிர்தல்,
- பாலியல் நோக்குநிலை அல்லது பால்நிலை அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்ட துன்புறுத்தல்கள்,
- குரோதம், வன்முறை, அச்சுறுத்தல், மிரட்டுதல், சைபர் வெளியினுள் இடையூறு விளைவித்தல் மற்றும் அச்சத்தை தோற்றுவிக்கும் பேச்சுக்கள்,
- ஓரங்கட்டப்பட்ட சமூகத்தினருக்கு (Marginalised community) இடையூறு விளைவித்தல்,
- சட்டவிரோத செயற்பாடுகள்,
- தரவுகளைத் திருடுதல், தகவல் மற்றும் ஊடக மூலங்களை நெறிமுறையற்ற விதமாக துஷ்பிரயோகம் செய்தல் (அனுமதியின்றி புகைப்படங்களைப் பயன்படுத்துதல் போன்ற),
- தவறான, போலியான மற்றும் தவறாக வழிநடாத்தும் உள்ளடக்கங்கள்,

**மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டியினைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் பொறுப்புடைய, ஒழுக்கநெறியுடன் கூடிய ஜனநாயக கையாளுகைகளை மேம்படுத்துவதற்காக கீழ்வருவனவற்றை ஊக்குவிப்பதற்கு நாம் இணக்கம் தெரிவிக்கிறோம்.**

- வெளிப்படையான, இலவச இணையம், தகவலறிவதற்கான உரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றை பாதுகாத்தல் மற்றும் உறுதிப்படுத்துதல்.
- தகவலறிவதற்கான உரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றை பறிக்கப்பட முடியாத டிஜிட்டல் உரிமைகளாக பாதுகாத்து உறுதிப்படுத்துதல்.
- ஓரங்கட்டப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட குரல்களுக்கு சந்தர்ப்பளிக்கும் சமூக ஊடக வெளியை, வாய்ப்புக்கள் மற்றும் தளங்களைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் அவற்றுக்கான அணுகல் வெளியை நியாயமான செலவுக்குட்படுத்துதல்.
- ஊடக மற்றும் தகவல் கல்வியறிவினை மேம்படுத்துதல்.
- ஓரங்கட்டப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட மற்றும் அவதானத்திற்குட்படக் கூடிய சமூகத்தினர், விசேடமாக பெண்களுக்கு எதிரான, பால்நிலை, LGBTQIA+ எதிர்ப்பு மற்றும் எண்ணிக்கை அடிப்படையிலான சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறை மற்றும் அவதானத்திற்குட்பட வேண்டிய சமூகத்தினருக்கான நிலையான, பாதுகாப்பான மற்றும் அவர்களை ஏற்றுக்கொள்கின்ற சமூக ஊடக வெளியை உருவாக்குதல், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அதற்காக வாதிடுதல்.
- தனிமனித உரிமைக்கு மதிப்பளித்தல் மற்றும் பாதுகாத்தல், தரவுகளைப் பயன்படுத்துவதற்கான இணக்கப்பாட்டு நிலைமைகள் அத்தியாவசிய மற்றும் சமநிலையானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தமது தரவுகள் மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்ட, பயனர்களுக்கு வெளிப்படைத்தன்மை (Transparency) போக்கினைக் கொண்டதாக அமைய மேம்படுத்துதல்.

# சமூக ஊடகத் தளங்களின் பொறுப்புகள்

- தகவல்களின் முழுமைத்தன்மை (துல்லியப்பாடு, இசைவாக்கம், நம்பகத்தன்மை, பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை) மற்றும் மனித உரிமைகளை மதித்தல், சமூக ஊடகங்கள் வாயிலாக ஜனநாயகத்தை வலுப்படுத்துதல் மற்றும் பயனர்களை வலுவூட்டுவதற்கான அடிப்படைக் கோட்பாடுகளைப் பாதுகாத்தல்,
- Content Moderation இன் தரத்தை அதிகரிப்பதற்காக உள்ளூர் மொழிகளின் (சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டினதும்) இயலுமையை விரிவாக்குதல்,
- இலங்கையின் சூழ்நிலை, பயனர்களது சமூக நிலைப்பாடு, மொழித் திறன் மற்றும் அவர்கள் செயற்படுகின்ற கால மட்டங்கள் தொடர்பில் பயனர் – தொழிற்பாட்டு அறிக்கைகளுடன் (User generated reports) நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள தரப்பினரின் எண்ணிக்கை தொடர்பில் வெளிப்படைத்தன்மை காணப்படல்,
- 24 மணித்தியாலங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் வன்முறை மற்றும் வெறுக்கத்தக்க நடத்தையைத் தூண்டும் வெறுப்புப் பேச்சுக்களை அகற்றுவதற்காக செல்லுபடியாகும் அறிவிப்புக்களை (Valid notifications) மீளாய்வு செய்ய வேண்டுமெனில், மேற்குறித்த உள்ளடக்கத்திற்கான அணுகலை அகற்றுவதற்கோ அல்லது பலவீனப்படுத்துவதற்கோ முறையான அர்ப்பணிப்பு, அதிக வன்முறைகள் ஏற்படக்கூடிய நிலைமைகளுக்கு மத்தியில் மேற்படி காலப்பகுதியை மேலும் குறைத்தல்,
- சேவைகளின் போது வெறுப்புப் பேச்சுக்கள் தொடர்பான அறிவிப்புக்களை மீளாய்வு செய்வதற்கு தெளிவான மற்றும் பயன்மிக்கதுமான செயன்முறை காணப்படல். அதன்போது அவர்களை அவ்வாறான உள்ளடக்கங்களை அணுகுவதற்கான இயலுமையை அகற்றுவதற்கோ அல்லது பலவீனப்படுத்தவோ முடியும். வன்முறையைத் தூண்டுகின்ற மற்றும் வெறுக்கத்தக்க நடத்தையை மேம்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனை தெளிவுபடுத்தும் பரசீலனைகள் மற்றும் விதிகள் அல்லது சமூக வழிகாட்டல்களை பகிரங்கப்படுத்துதல்,
- அனுமதி கிடைக்கப்பெறாத உள்ளடக்க வகைகள் தொடர்பில் பயனர்களுக்கு கற்பித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல், சகல தேசிய மொழிகளிலும் மிக இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய மற்றும் பொதுவான கொள்கைகளூடாக பயனர்களது தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணித்தல்,
- டிஜிட்டல் உருவாக்கங்கள் சிறந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் நன்மையானதெனவும், அது பயனர்களுக்கோ அல்லது சமூகத்திற்கோ பாதிப்பினை ஏற்படுத்தாது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக புதிய உருவாக்கங்களின் நிலைமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். அத்துடன், சமூக ஊடகத் தளங்களின் சாதகமான போக்குகளைப் பகிர்ந்துகொள்வதை அதிகரிப்பதற்கு நிறுவனங்களுக்கிடையில் ஒத்துழைப்புக்களைத் தீவிரப்படுத்துதல்,
- சமூக ஊடகங்கள் பன்மைத்துவ குரல்களுக்காக, விசேடமாக ஒடுக்கப்பட்ட மற்றும் குறைவான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சமூகக் குழுவினருக்கான ஒரு திறந்த தளமாக அமைதல் வேண்டும். மேற்படி கண்ணோட்டங்கள் பாதுகாக்கப்படுகின்ற வகையில் அல்கோரிதம் (Algorithmic) உருவாக்கம் மற்றும் உள்ளடக்கங்களை தரப்படுத்துதல்,
- பெண்கள் மற்றும் எண்ணிக்கை ரீதியிலான சிறுபான்மை இனத்தவர்களுக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும் மற்றும் அடக்குமுறைக்கு உட்படுத்தும் பெண்ணியல் எதிர்ப்பு, இனவாதம், வன்முறை, அச்சுறுத்தல்கள் மற்றும் தொல்லைகளுக்கு எதிராக வலுவான பாதுகாப்பினை வழங்குதல்,
- ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவைப் (Generative Artificial Intelligence) பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட அல்லது மேம்படுத்தப்பட்ட உள்ளடக்கங்களை அடையாளம் காணல் மற்றும் தெளிவாக விபரங்களைக் (Label) குறிப்பிடுதல்.

# அரசாங்கத்தின் பொறுப்புகள்

- இணையத்தில் தகவல்களின் துல்லியம், இசைவாக்கம், நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற அதேவேளை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உட்பட மனித உரிமைகளை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் பாதுகாக்கின்ற ஒன்லைன் சூழலை வலுப்படுத்துதல்.
- வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் சமமான இணையதள வசதிகளைப் பெற்றுக் கொடுத்து தொடர்ச்சியான தகவல் அணுகலை உறுதிப்படுத்துவதற்காக இணையச்சேவை மந்தநிலை அல்லது முடக்குதல் (Internet slowdowns & Shutdowns) ஆகியவற்றினைத் தடுத்து 'இணைய சுதந்திரம்' குறித்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.
- தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை இணையதளத்தினூடாக குரோதம், வன்முறை, பொய்யான தகவல்கள் (Disinformation), சமூகநிலைகளை அடிப்படையாகக் கொண்ட வன்முறை மற்றும் பாரபட்சங்களைத் தூண்டுகின்ற வகையிலான உள்ளடக்கங்களுக்கு எதிராகப் போராடுகின்ற போது இலங்கை கையொப்பமிட்டுள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICCPR) போன்ற சர்வதேச சமவாயங்களை அமுல்படுத்துதல் மற்றும் அவற்றின் தவறான கையாளுகையைத் தடுத்தல்.
- பயனர்களின் தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பயனர்களின் தனித்துவம் மற்றும் தரவுகள் பற்றிய குறிப்பான சட்டங்களை சர்வதேச தரங்களுக்கமைவானதாக நடைமுறைப்படுத்துதல்.
- எந்வொரு சட்டச் செயற்பாடு, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் தகவல்களின் துல்லியப்பாடு, இசைவாக்கம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை மேம்படுத்தும் 'சர்வதேச தரநியமங்களுக்கு' உட்பட்டு செயற்படுவதனை உறுதிப்படுத்துதல் மற்றும் உறுதி செய்தல்.
- தவறான மற்றும் பொய்யான (Misinformation & Disinformation) தகவல்கள் இணையதளத்தினுடாக பரவுகின்ற முறைகள் தொடர்பிலான ஆய்வுகளுக்கு ஒத்துழைத்தல், தகவல்களின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்காக பயனர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு தேசிய கல்விப் பாடவிதானத்திற்கு டிஜிட்டல் கல்வியை ஒரு பாடமாக சேர்த்தல்.
- தகவல்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைப் பேணுவதற்காக, சமூக ஊடகத் தளங்கள் உட்பட ஒன்லைன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல அரசியல் பிரசாரங்களுள் காணப்படும் விளம்பரங்கள் மற்றும் செய்திகள், அந்த விளம்பரங்களின் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் அதற்கிணையானவற்றில் 'அனுசரணை அளிக்கப்பட்டது' என்பது தெளிவாக குறிப்பிடப்படுதல்.
- ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் தவறான தகவல்களுக்கு (Misinformation & Disinformation) எதிராக போராடுவதற்கு துல்லியமான மற்றும் நம்பகத்தன்மை மிக்க தகவல்களை வழங்கும் எதிர்–செய்திப் பிரசாரங்களை (counter-messaging campaigns) ஆதரித்தல்.

*இணையத்தை ஒரு நியாயமான மற்றும் சம மட்டத்தில் செயற்படும் தளமாகப் பேணுவதற்கு 2017ஆம் ஆண்டு, நவம்பர் 23ஆம் திகதி புது டெல்லியில் இடம்பெற்ற இணையவழி தொடர்பான உலக மாநாட்டில் இணைய நடுநிலைமைத் தன்மை குறித்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பற்றுறுதிக்கு மதிப்பளித்தல் மற்றும் தகவல்களுக்கு தொடர்ச்சியான அணுகுவழிகளை உறுதிப்படுத்துவதற்கு இணையசேவை மந்தநிலை அல்லது இணையசேவையை முடக்குதல் என்பவற்றைத் தவிர்த்தல்.



# ஊடக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் பொறுப்புகள்

- உள்ளீர்ப்பு, பன்முகத்தன்மை மற்றும் பன்மைத்துவம் ஆகியவற்றை ஊக்குவிப்பது தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் Rabat Plan of Action இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில், டிஜிட்டல் வெளிகள் உட்பட, பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினர் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் வலுவான, ஆரோக்கியமான மற்றும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதனை ஊக்குவித்தல்,
- தற்போதைய சட்ட உருவாக்கப் பின்னணியில் பயனர்களுக்கு அவர்களின் டிஜிட்டல் உரிமைகளைப் பற்றி தெளிவூட்டுதல், ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு, டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் உரிமை தொடர்பில் தொடர்ச்சியாக மக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒத்துழைத்தல் மற்றும் அதற்காக செயற்படுதல், தேசிய பாடத்திட்டத்தில் டிஜிட்டல் கல்வியறிவை உட்சேர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தல்,
- சந்தர்ப்ப சூழலில் மற்றும் உண்மை மற்றும் கூறுணர்வுமிக்க வகையில் அறிக்கையிடும் ஊடக பொறுப்பிற்கிணங்க, சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் தவறான மற்றும் பொய்யான தகவல்களை (Misinformation & Disinformation) வெளிப்படுத்துதல் மற்றும் திருத்துதல்,
- கட்டுரைகள், பத்திகள் அல்லது ஒலி/ ஒளிபரப்புகளில் இருந்து அவதூறான அல்லது வெறுக்கத்தக்க உள்ளடக்கங்களை நீக்குகின்ற Editorial Policy அவற்றுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துகின்ற மற்றும் வெறுக்கத்தக்க பேச்சுக்களுக்கு எதிராக போராடுகின்ற அதிகாரபூர்வ பாரம்பரிய ஊடக இணையதளங்கள் மற்றும் சமூக ஊடக கணக்குகளுக்கான கருத்துகள் (Comments) உருவாக்கம் மற்றும் உள்ளடக்கத் தயாரிப்புக் கொள்கைகளை அறிமுகம் செய்வதற்கு ஒத்துழைத்தல், பாரபட்சங்களின் தீங்கான விளைவுகள் – ஜனநாயக எதிர்ப்பு நிலைமைகள் தொடர்பில் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவருவதனை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, சந்தர்ப்ப சூழல், உண்மை மற்றும் கூறுணர்வுமிக்க வகையில் அறிக்கையிடுவதனை அவதானிக்கின்ற ஊடகப் பொறுப்பினை மேம்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்,
- சகிப்புத்தன்மையின்மைக்கு எதிராகப் பேசுவதன் முக்கியத்துவம் மற்றும் திறந்த வெளிப்படையான கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவம் என்பவற்றை சுட்டிக்காட்டி வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராகப் போராடுவதற்கு எதிர் – செய்திப் பிரச்சாரங்களை (Counter-messaging campaigns) உருவாக்குவதற்கு ஒத்துழைத்தல்,
- சிவில் சமூக மற்றும் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களால் வழிநடாத்தப்படுகின்ற பொறிமுறைகள் மற்றும் கலந்துரையாடல் சூழல்களை உருவாக்குதல் மற்றும் அவற்றுக்கு ஒத்துழைப்பதனூடாக கலாச்சாரங்களுக்கிடையிலான மற்றும் சமயங்களுக்கிடையிலான தெளிவு மற்றும் கற்றுக்கொள்ளலைப் போஷித்தல்,
- சமயம் அல்லது நம்பிக்கைகள் உள்ளடங்களான விடயங்கள் தொடர்பில் வெளிப்படையான மற்றும் வலுவான கலந்துரையாடல் சூழல்களை உறுதிப்படுத்துவதற்காகவும் சமயம் அல்லது நம்பிக்கைகளின் அடிப்படையில் பாரபட்சத்திற்கு ஆளாவதிலிருந்து நபர்களை பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கு வாதிடல் (மத வழிபாடு அல்லது சமய நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரத்தைப் (FoRB) பாதுகாத்தல் மற்றும் அதற்காக வாதிடல்).
- வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராக மதத் தலைவர்கள் தொடர்ச்சியாகவும் துரிதமாகவும் பேசுவதனை ஊக்குவித்தல் மற்றும் வெறுப்பைத் தூண்டுவதற்கான பதிலாக வன்முறையைக் கையாளுதல் ஒருபோதும் சகித்துக் கொள்ளக்கூடியதல்ல என்பதனை அவர்களுக்கு தெளிவுபடுத்துதல். வன்முறையைத் தூண்டுகின்ற சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்காக சமத்துவ அமைப்புக்கள் (Equality Bodies) தாபிக்கப்படுவதற்கு அல்லது தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்.

# Generative AI
# பற்றிய பின்னணி

வெகுசன ஊடக  செயற்பாட்டினுள் Generative AI பயன்பாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய ஒழுக்கநெறி சார்ந்த பிரச்சினைகளுக்குரியதான தவறுகள் (Errors) அல்லது பக்கச்சார்பு நிலை, ஆவணத் திருட்டு (Plagiarism) மற்றும் ‘அறிவு குறைந்த மற்றும் ஒரே வகையான’ உள்ளடக்கங்களை உருவாக்கும் ஆபத்தான நிலைமை என்பன உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக பொதுமக்களின் நம்பிக்கையை பலவீனப்படுத்தும் மற்றும் வெகுசன ஊடகங்களின் நம்பகத்தன்மையை சீர்கெடச் செய்வதற்கு Generative AI உள்ளடக்கங்களுக்கு உள்ள இயலுமையையும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. ஊடக நிறுவனங்களால் ஊடக உள்ளடக்கத்தின் புலமைச்சொத்து உரிமைகளுக்கு மதிப்பளிக்காத AI பயன்பாட்டிற்கு எதிராக எச்சரிக்கை விடுத்துள்ளன. அதாவது அது நம்பகத்தன்மை இல்லாத விடய உள்ளடக்க உருவாக்கத்திற்கு ஏதுவாக அமையும் என்பதனால் ஆகும். பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு Generative AI உள்ளடக்கத்திற்கும் பொறுப்புக் கூறுகின்ற மற்றும் மூன்றாந் தரப்பினரின் புலமைச் சொத்துரிமைகளை கவனக்குறைவுடன் மீறுவதற்கான இயலுமை காணப்படுதல் போன்ற சட்ட ரீதியான காரணங்களும் உள்ளன.

ஊடகங்களில் உருவாக்கப்படும் AI உள்ளடக்கத்தின் துல்லியப்பாடு மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக பத்திரிகையாளர்கள் உண்மை – பொய் என்பதனை சரிபார்ப்புச் செய்யும் கடுமையான செயல்முறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் மனித மேற்பார்வையை நடைமுறைப்படுத்த முடியும். வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்துதல் என்பன முக்கியமானவையாக அமைவதுடன், ஊடக நிறுவனங்கள் செய்தித் தயாரிப்பின்போது AI பயன்பாடு குறித்து வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டுமென்பதுடன், AI மூலமாக உள்ளடக்கங்கள் உருவாக்கப்படும் போது அதுபற்றி தெளிவாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். செய்தி அறிக்கையிடலின் பூரணத்துவத் தன்மையை பேணிச்செல்லும் பொருட்டு உண்மை – பொய் என்பதனை உறுதிப்படுத்தி தவறான தகவல்களுக்காக (Misinformation & Disinformation) எதிராக போராடுவது அவசியமாகும். இதற்கு மேலதிகமாக, Generative AI உள்ளடக்கங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்திற்கு சமமானதான உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவதற்காக Edotorial Policy தரப்படுத்தலைப் பேணுதல், விடயங்களின் உண்மைச் சரிபார்ப்பு நெறிமுறைகள், மூலாதாரங்களின் உண்மை – பொய் சரிபார்ப்பு மற்றும் ஊடக நெறிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். இந்த நடைமுறைகளைப் பாதுகாப்பதன் மூலம், ஊடகவியலாளர்கள் பொறுப்புடன் கூடியதான ஊடகத்துறையில் ஒழுக்கநெறிமுறையுடன் Generative AI ஐப் பயன்படுத்த முடியும்.



# சமூக ஊடகப் பிரகடனம் மற்றும் செயற்கை நுண்ணறிவு

# (Generative Aartificial Intelligence)

**எமக்கு நம்பிக்கையான, ஏற்றுக்கொள்ளக்கூடிய, தொழிற்றுறை சார்ந்த மற்றும் பக்கச் சார்பற்ற பிரஜைகள் ஊடகத்தின் பொருட்டு, ஊடக உள்ளடக்கங்களை உருவாக்குவதற்கு (அவசியமாகும் அனைத்து சந்தர்ப்பங்களிலும்) ஒழுக்கநெறிமிக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கருவிகள், தளங்கள் அல்லது செயலிகளைப் பயன்படுத்துதல் மிக முக்கியமாகும். இதற்காக பற்றுறுதி கொண்ட ஐந்து (05) முக்கிய அம்சங்களாவன,**

1. **வெளிப்படைத்தன்மை** Generative AI பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்கள் பற்றிய விபரக் குறிப்பு (Label) காணப்படுதல். அதன்போது அவை முழுமையாக மனிதனின் மத்தியஸ்தமின்றி, அதாவது செயற்கை ஊடகத்தின் வாயிலாக முற்றிலும் உருவாக்கப்பட்டது என்பதனை மக்கள் அறிந்து கொள்வார்கள். உதாரணமாக ‘முழுமையாக Generative AI மூலமாக உருவாக்கப்பட்டுள்ளது’ என விபரக்குறிப்பிடல். இது வாசகர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் பேணுவதற்கும் உதவும்.
2. **துல்லியப்பாடு** – Generative AI மூலமாக உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களை கவனமாகப் பரிசீலிக்கவில்லையெனில், அவை பொய்யான காட்சிகள் மற்றும் பக்கச் சார்பான கட்புல வெளிப்படுத்தல்களூடாக போலியான, தவறான மற்றும் பொய்யான தகவல்களை (Misinformation & Disinformation) பரப்ப முடியும். தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நம்பத்தகுந்த மூலாதாரங்களைப் பயன்படுத்தி Generative AI உள்ளடக்கங்களை வெளிப்படுத்துவதற்கு முன்னதாக அவை பரிசீலிக்கப்படும். இந்தச் செயற்பாட்டுக்கு உதவும் முகமாக புதிய கருவிகள் உட்பட கைத்தொழில்களின் நிலைமைகளை பரிசீலிப்பதற்காக முன்னேற்றகரமான அளவுகோல்களைப் பயன்படுத்துவதும் மிக அவசியமானதாகும்.
3. **பொறுப்புக்கூறல்** – செயற்கை நுண்ணறிவு உள்ளடக்கம் தீங்குகளை ஏற்படுத்துமாயின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தெளிவான வகையிலான தீர்வுச் செயன்முறைகளைக் கொண்டிருக்கவும், வாசகர்கள் மற்றும் ஊடகப் பாவனையாளர்கள் உட்பட பாதிக்கப்பட்ட மக்களுக்கு முறையிடுவதற்கு மற்றும் உண்மைத்தன்மையை கேள்விக்குட்படுத்துவதற்கான வழிமுறைகள் காணப்படுதல் வேண்டும்.
4. **உரிமைகளை மதித்தல்** – பயன்படுத்துகின்ற Generative AI கருவிகள், ஒழுக்க நெறிகளின் தரம் மற்றும் இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் உள்ளடங்களாக அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல் வேண்டும். அவை தீங்கு விளைவிக்கும் பக்கச்சார்பான மற்றும் ஒரே மாதிரியான விடயங்களை உருவாக்கும், பரப்புரைசெய்யும் அல்லது பேணிச்செல்பவையாக இருத்தல் ஆகாது.
5. **துறைசார் நிபுணர்களை இணைத்துக்கொள்ளல்** – சிறந்த கையாளுகைகளை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் Generative AI பயன்பாட்டின் போது உரிய விடயத்துறை நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூகம் போன்ற பல்வேறான குழுக்களிடமிருந்து கருத்துக்களைப் பெறல், சுயாதீன கணக்காய்வு மற்றும் மேற்பார்வை, அதனைப் பயன்படுத்துகின்ற உள்ளக செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு உதவுகின்ற அதேவேளை, Generative AI தொடர்பான வெளிவாரியான வெளியீடுகளின் போது மக்கள் தேவைப்பாட்டின் பொருட்டு சேவையாற்றுதல்.

அதன்போது, ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற அதேவேளை, பொதுமக்களைத் தெளிவுபடுத்துவதற்காக அதன் சாத்தியப்பாட்டினைப் பயன்படுத்திக்கொள்வதற்கும், பிரஜைகள் ஊடகங்கள் உட்பட ஊடகங்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களின் கண்காணிப்பிற்குட்பட்டதாக வெளிப்படையாகவும், துல்லியமாகவும், பொறுப்புடனும் Generative AI பயன்படுத்துதல் வேண்டும்.

# SIGNATORIES

Jaffna Press Club
Eastern Provinces Journalists forum
Centre for Policy Alternatives
Human Elevation Organization
Sri Lanka Working Journalists Association
ActNow Youth Campaign
Wedabima Media collective
National Collaboration Development Foundation
Best Vision foundation
Low & Society Trust
SARVODAYA Shramadana Movement
Movement for Land and Agricultural Reform
Sri Lanka Muslim Media Forum
Internet Media Action
maatram.org
vikalpa.org
groundviews.org
minormatters.org



COLOMBO I 2019 - 2024

# social media declaration

Version 2.0

#EngageSMinSL

**“Hardwired for Life:**
**Human Rights Online and Offline’**

socialmedialanka.org |@SMDsrilanka | facebook.com/SMDsrilanka
| sampath@cpalanka.org | +94 777 248304